தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

ஆண்டிறுதிப் பரீட்சை 2024

ஆண்டு: 8 திகதி: 23.11.2024

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சத்தியதேவி பாலகங்காதரன்
உதவி ஆசிரியர்: செல்வி வர்ஷினி கேதீஸ்வரன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	20	
வினா 3	10	
வினா 4	10	
வினா 5	15	
வினா 6	25	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	2

கீழ்வரும் பந்தியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

மஞ்சு விரட்டு

தமிழ் நாட்டில் கொண்டாடப்படும் முக்கியமான பண்டிகைகளுள் பொங்கல் பண்டிகையும் ஒன்று. பொங்கல் பண்டிகை முடிந்தபிறகு சில ஊர்களில் நடக்கும் வீர விளையாட்டுத்தான் மஞ்சு விரட்டு. இந்த விளையாட்டின்போது துணிவு மிகுந்த இளைஞர்கள் முரட்டுக் காளைகளை அடக்குவார்கள்.

இந்த விளையாட்டிற்காகக் காளைகள் தேர்ந்தெடுத்து வளர்க்கப்படுகின்றன. அவை முரட்டுக் காளைகள். அவற்றின் கொம்புகள் மிகக் கூர்மையாகச் சீவப்பட்டிருக்கும். காளைகளின் சொந்தக்காரர்கள் அவற்றின் கழுத்தில் மணியைக் கட்டி, மாலையிட்டு மஞ்சுவிரட்டு **நிகழும்** இடத்துக்குக் கொண்டு வருவார்கள்.

இந்த விளையாட்டைப் பெரும்பாலும் ஊருக்கு வெளியே நடத்துவார்கள். முதலில் மூங்கில் அடைப்புக்குள் காளைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும். முழவு, மேளம், மத்தளம் முதலிய பல்வேறு இசைக்கருவிகளின் ஒலி கேட்டுக் காளைகள் **மிரண்டிருக்கும்**. ஏற்பாட்டாளர்கள் காளைகளைத் திறந்து விட்டதும் அவை பல திசைகளிலும் ஓடும். புல திசைகளிலிருந்து வரும் வீரர்களை இருந்த இடத்திலிருந்தே எதிர்கொள்ளும் காளைகளும் உண்டு. துணிச்சல் மிக்க இளைஞர்கள் அவற்றைத் துரத்திச் செல்வார்கள். அவற்றைப் பிடித்து அடக்குபவர்களே வெற்றியாளர்களாகப் பாராட்டப்படுவார்கள்.

ஓடும் முரட்டுக் காளையை அடக்குவது என்பது அவ்வளவு **எளிதான** செயல் இல்லை. வீரர்கள் அதன் **திமிலை** ஒரு கையால் பற்றிக்கொள்வார்கள். மற்றொரு கையால் கொம்புகளில் ஒன்றைப் பிடித்துக்கொள்வார்கள். பிறகு திறமையாக அதன் தலைப்பகுதியை வளைத்து நிலைதடுமாறச் செய்வார்கள். இதில் ஒரு சிலர் ஆபத்தில் சிக்கி இறப்பதும் உண்டு.

ஒரு சில இடங்களில் காளையின் கொம்புகளில் பண முடிப்பைக் கட்டி வைப்பார்கள். அதை எடுப்பதற்காக இளைஞர்கள் காளைகளைத் துரத்திச் செல்வார்கள். பண்டைக் காலத்திலிருந்தே இந்த விளையாட்டைத் தமிழர்கள் விளையாடி வருகிறார்கள். இன்றும் இதைப் போன்ற வீரவிளையாட்டுகள் பல நாடுகளில் வெவ்வேறு விதமாக நடைபெறுகின்றன.

1.1 மஞ்சு விரட்டுக்குக் காளைகளை எவ்வாறு தயார்ப்படுத்துகிறார்கள்?

_____

_____

_____

1.2 மஞ்சு விரட்டின் போது இளைஞர்கள் என்ன செய்வார்கள்?

_____

_____

_____

1.3 இந்த விளையாட்டிலுள்ள ஆபத்து என்ன?

_____

_____

_____

1.4 காளைகளை அடக்குவது போன்ற இத்தகைய வீர விளையாட்டுகளை நடத்துவது பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

_____

_____

_____

1.5 பொருள் எழுதுங்கள்.

அ) நிகழும் ----------

ஆ) மிரண்டிருக்கும் ----------

இ) எளிதான ----------

ஈ) திமிலை ----------

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	4

பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுங்கள்.

2.1 தமிழர்கள்: _____

_____

2.2 தலைமுறையினர்: _____

_____

2.3 சவால்கள்: _____

_____

2.4 வணிகம்: _____

_____

2.5 நாட்டுநலன்: _____

_____

2.6 ஆரோக்கியமான உணவு: _____

_____

2.7 மூத்தகுடிமக்கள்: _____

_____

2.8 பெண்கல்வி: _____

_____

2.9 ஆபத்துகள்: _____

_____

2.10 உரிமைகள்: _____

_____

வினா இல	3	புள்ளிகள்	10	பக்கம்	5

கோடிட்ட இடங்களில் கீழே தரப்பட்ட சொற்களில் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

உறக்கம், வெளியேற்ற, ஏற்படும், மூளையும்

தொடர்ந்து, களைத்து, நரம்புகளும், காரணம்,

ஓய்வு, சிந்தனை, சேர்கின்றன, உடற்சோர்வை,

தலையும், பழுதடைந்து, தேவையான

சில சமயங்களில் ஒருவர் ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்வதை நாம் பார்த்திருப்போம்.

நீண்ட நேரம் தொடர்ந்து வேலை செய்யும் போது உறுப்புகள் ---------- போகின்றன.

அதுபோலவே, நீண்ட நேரம் சிந்தனை செய்வதால் ---------- களைத்துப் போகின்றது.

தசை நார்கள் ---------- வேலை செய்வதால் உடலில் கழிவுப் பொருள்கள் உண்டாகின்றன.

கழிவுப்பொருள்கள் விரைவாக அகற்றப்படாவிட்டால் தசையும் ---------- சோர்வடைகின்றன. இதுவே விரைவில் களைப்பு ஏற்படக் ---------- ஆகிறது.

அதிக மன உளைச்சலுக்கு ஆளானாலும், அதிக ---------- செய்ய நேரிட்டாலும், மூளை தொடர்ந்து வேலை செய்கிறது. அப்போதும் நரம்பு மண்டலங்களில் கழிவுப் பொருள்கள் ---------- .

உடல் சோர்வு மனச்சோர்வை உண்டாக்குவது போல, மனச்சோர்வும் ---------- உண்டாக்கும்.

சோர்வினைப் போக்க நாம் ---------- எடுத்துக் கொள்ளுகிறோம். ----------

என்பது மனச் சோர்வைப் போக்கும் வழிகளுள் ஒன்று. அதனால் நாம் உடலுக்கும் உள்ளத்துக்கும் தேவையான உறக்கத்தைத் தவிர்க்கக் கூடாது.

வினா இல	4	புள்ளிகள்	10	பக்கம்	6

4.0 பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் மூன்று தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுதுங்கள்.

4.1 பாட்டி சத்துள்ள உணவை உண்டு, நன்றாக உடற்பயிற்சியும் செய்ததால் நீண்ட ஆயுளுடன் ஆரோகியமாக வாழ்கிறார்.

4.2 சிறுவர்கள் மாலை நேரம் பூங்காவில் விளையாடிப் பின் வீட்டுக்கு வந்து உணவு உண்டு பள்ளிப் பாடங்களைப் படித்தனர்.

4.3 தமிழ்மீது தீராத ஆர்வம் கொண்டிருந்த தனிநாயகம் அடிகளார் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தைத் தோற்றவித்து, மலேசியாவில் முதலாவது மாநாட்டை நடாத்தி, உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்த பெருமையைப் பெற்றறார்.

4.4 பாரதியார் பெண்கல்வி பற்றிப் பல பாடல்களைப் பாடியதால் காலப்போக்கில் பெண்கள் பல உரிமைகளைப் பெற்றுத் தற்போது பல ஆற்றல்களையும் வாய்ப்புகளையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர்.

4.5 தமிழரசர்கள் பொன்னையும் பொருளையும் புலவர்களுக்கு வாரிவழங்கியதால் புலவர்கள் எந்தக் குறையுமில்லாமல் வாழ்ந்து சிறந்த தமிழ் இலக்கியங்களை இயற்றினார்கள்.

வினா இல	5	**புள்ளிகள்**	15	**பக்கம்**	7

5.0 பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதுங்கள்.

5.1 உமது பள்ளியில் நடைபெற்ற பல்கலாசார விழா பற்றி உமது நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதுங்கள்.

5.2 உமது நண்பர் ஒருவர் உடல்பருமனாகிக் கொண்டு வருகின்றார். அவர் உடல்நலத்தைக் காக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிக் கடிதம் எழுதுங்கள்.

வினா இல	6	புள்ளிகள்	25	பக்கம்	9

6 கீழே உள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து எடுத்து 120 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுங்கள்.

6.1 எனக்குப் பிடித்த தமிழ்ப்பண்டிகை

6.2 முதியோர் பராமரிப்பு

6.3 தற்காலத்தில் தமிழ்ப்பெண்கள்